கிருபையுள்ள வார்த்தை®

KIRUBAIYULLA VAARTHAI

லூக்கா (LUKE) 4:22

Vol - 24 | ஏப்ரல் APRIL | 2023

ஆண்டு சந்தா ரூ. 100/- | தனிப் பிரதி ரூ. 10/- | வெளிநாட்டு சந்தா ரூ. 600/-

அல்லேலூயா, கர்த்தருக்குப் பயந்து, அவருடைய கட்டளைகளில் மிகவும் பிரியமாயிருக்கிற மனுஷன் பாக்கியவான்

சங் 112:1

முதன்முதலில் தமிழ் பைபிள் அச்சடிக்கப்பட்ட இயந்திரம், தரங்கம்பாடி

நமது கிருபையுள்ள வார்த்தை TV நேயர் & பத்திரிக்கை வாசகர் கூட்டம் இந்த ஆண்டு தரங்கம்பாடியில் நடைபெறுகின்றது.

விபரம் உள்ளே...

கௌரவ ஆசிரியர் BETTY CHOATE

ஆசிரியர் பிலேமோன் ராஜா

புதிய ஏற்பாட்டு கிறிஸ்தவத்தை மீட்டமைக்கும் இதழ்

இதழின் உள்ளே...

ஆசிரியர் உரை	3
பெண்கள் பகுதி	8
வாலிபர் பகுதி	10
சிறுவர் பகுதி	11

In memory of J.C. CHOATE

Guest Editors : **Betty Choate, Jerry & Paula Bates**

Editor : **PHILEMON RAJAH**

ஆசிரியர் குழு

V. கிங்ஸ்லி ராஜா. M.Th.,
R. ஆண்டனி ராஜா. D.Th.,M.B.A (Bible Studies)
Dr. V.S. இம்மானுவேல். M.Sc., D.D., **C. கியாமிலஸ் கார்த்திக்.** B.Sc.,
P. பேபி ராஜா D.Th., **E. ஜோசப் பிரதீப்** B.Th.,

சட்ட ஆலோசகர்கள்
அட்வகேட் B. கருப்பசாமி பாண்டியன் B.A., B.L
அட்வகேட் V. சுப்பிரமணியன் M.A., B.L

கிருபையுள்ள வார்த்தை TV நிகழ்ச்சிகள்

நம்பிக்கை T.V. யில்

ஞாயிறு மதியம் 3:30 மணி

தமிழன் T.V. யில்

ஞாயிறு காலை 7:00 மணி

செய்தியாளர்கள்

போதகர். **பிலேமோன்ராஜா,** M.A., M.Th.,
(Director - J.C. School of Evangelism)

சகோ. **கிங்ஸ்லி ராஜா,** M.Th.,
(இணை ஆசிரியர் – கிருபையுள்ள வார்த்தை)

OUR ENGLISH TV PROGRAM

SALVATION TV

Every Sundays 2pm

Speakers:

Jerry Bates & Kingsly Rajah

வாசகர்கள் கவனத்திற்கு !

உங்களுக்கு அனுப்பப்படும் நமது மாத இதழ், சரியான காரணமின்றி சில நேரங்களில் திரும்பி வருவதால், உங்களுடைய தெளிவான முகவரி மற்றும் தொலைபேசி எண்ணை எங்களுக்கு அனுப்பிவைக்கவும்.

Phone : 92 4421 4421, 92 4431 4431, 99 9426 7004

கிருபையுள்ள வார்த்தை

கல்லான இருதயத்தினை நீக்கி சதையான இருதயத்தினை தந்தருளும் கர்த்தாதி கர்த்தரின் வார்த்தை.

World Literature Publication : Post Box No. 15, Arasaradi, Madurai - 625 016. India

ஆவிக்குரிய மதியிறுக்கம்

SPIRITUAL AUTISM

ஆசிரியர் உரை

Dr. P.C. பிலேமோன் ராஜா

அன்பான கிருபையுள்ள வார்த்தை வாசகர்கள் அனைவருக்கும் நமக்கு ஞானமும் மீட்புமாகிய ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே எனது அன்பின் வாழ்த்துக்கள் மற்றும் ஜெபங்கள். இந்த மாதம் ஆவிக்குரிய மதியிறுக்கம் (Spiritual Autism) என்பது என்ன என்பதனை குறித்து தியானம் செய்ய நம் மனதினை ஆயத்தப்படுத்துவோம்.

மதியிறுக்கமும், ஆவிக்குரிய மதியிறுக்கமும்...

(Autism and Spiritual Autism)

மதியிறுக்கம் என்பது சரீர குறைபாடு, அதேப்போல ஆவிக்குரிய மதியிறுக்கம் என்பது ஆத்தும குறைபாடாகும். அதாவது நோயாகும். மதியிறுக்கம் (ஆட்டிசம்) என்பது, மூளை, தகவல்களைப் பயன்படுத்திப் புரிந்துகொள்ளும் திறனைத் தடுப்பது.

பார்த்தல், கேட்டல் என உணரும் விஷயங்களைச் சரியாகப் பயன்படுத்த முடியாமல், மனிதர்களின் நடவடிக்கைள் மாறிப்போவதே ஆட்டிசம் எனப்படும்.

மேலும், மதியிறுக்கம் என்பதை சரியான காலத்தில் அடையாளம் காணாவிட்டால், எதிர்காலம் வீணாகிவிடும். இந்தக் குறைபாட்டைச் சீக்கிரமாகக் கண்டறிவதன் மூலம் நல்ல முன்னேற்றத்தைக் கொண்டு வர முடியும் என்று சொல்லப்படுகின்றது.

ஆவிக்குரிய மதியிறுக்கம் என்பது கர்த்தருடைய காரியங்களை (வசனங்களை) கேட்பதில், விசுவாசிப்பதில், அதற்கு ஏற்றபடி தன்னை மாற்றுவதில், அவைகளை அறிக்கையிடுவதில், மற்றும் அதற்கு கீழ்படியும்படி தன்னை ஒப்புவிப்பதில், மனிதர்க்கு ஏற்படும் தடுமாற்றம் மற்றும் தடமாற்றமாகும்.

இது, ஒருவர் தனக்குரிய நித்தியத்தினை நித்தியமாகவே இழந்துவிடும் அபாயம் இருப்பதினால், இந்தக் குறைபாட்டினை சரிசெய்தல் மிகவும் அவசியமாகும். ஆகையினால் இதனை பற்றி நாம் படிக்க வேண்டியது மிகவும் அவசியமானதாகும்.

1) கேட்பதில் மதியிறுக்கம்

மத். 13:15 "இந்த ஜனங்கள் கண்களினால் காணாமலும், காதுகளினால் கேளாமலும், இருதயத்தினால் உணர்ந்து மனந்திரும்பாமலும், நான் அவர்களை ஆரோக்கியமாக்காமலும் இருக்கும்படியாக, அவர்கள் இருதயம் கொழுத்திருக்கிறது காதால் மந்தமாய்க் கேட்டு, தங்கள் கண்களை மூடிக்கொண்டார்கள் என்பதே."

முதலாவதாக, நாம் கேட்பதில் மதியிறுக்கம் என்ன என்பதனை அறிவோம். கேட்பதில் மதியிறுக்கம் என்பது கர்த்தருடைய வார்த்தையை கேளாமலிருத்தல், கேட்பதை தவிர்த்தல், அப்படியே கேட்க வாய்ப்பு கிடைத்தாலும் ஆர்வமின்றி கேட்டல், கேட்கின்றதனை உணர மறுத்தல், கேட்கின்றதை மனதிற்குள் கொண்டு செல்லாமல் உடனே மறத்தல், கர்த்தருடைய வார்த்தை தன்னிடம் பேசுவதை பிறருக்கு என்று நினைத்தல், கர்த்தருடைய வார்த்தையினை கற்றுக்கொள்ள போதுமான நேரத்தினை கொடுக்காமலிருத்தல், மற்றும் கர்த்தருடைய வார்த்தை கேட்க கிடைக்கும் வாய்ப்புகளை வீணடித்தல் போன்றவையெல்லாம் கேட்பதில் மதியிறுக்கமாகும்.

இப்படிப்பட்ட மதியிறுக்கத்தினால் நிறைந்திருந்த மக்களை பார்த்து, ஆண்டவர் இயேசு 'கேட்கிறதற்கு காதுள்ளவன் கேட்கக்கடவன்' என்று சொன்னார். **(மத் 11:25).** மேலும் கேட்கின்ற விதத்தினை குறித்து கவனமாக இருக்கச் சொன்னார். **(மாற்கு 4:24).** "பின்னும் அவர் அவர்களை நோக்கி: நீங்கள் கேட்கிறதைக் கவனியுங்கள். எந்த அளவினால் அளக்கிறீர்களோ, அந்த அளவினால் உங்களுக்கும் அளக்கப்படும், கேட்கிற உங்களுக்கு அதிகம் கொடுக்கப்படும்."

கர்த்தர், இஸ்ரவேல் மக்கள் பேசும்போது, அவர்கள் அதனை பொறுக்கக்கூடாமல், கர்த்தரை தங்களுடன் பேச வேண்டாம் என்றனர் **(யாத் 20:19).** ஸ்தேவான் கர்த்தருடைய வார்த்தையை போதிக்கும்போது, யூதர்கள் தங்கள் காதுகளை மூடிக்கொண்டனர் **(அப் 7:57).** அத்தேனே பட்டணத்து மக்கள் பரியாசம் செய்தனர் **(அப் 17:32).** பேலிக்ஸ் ராஜா அலட்சியம் செய்தான் **(அப்போ 24:25).** மார்த்தாள் உலக வேலைகளில் மும்முரமாக இருந்தாள் **(லூக்கா 10: 40).** ஆனால் மரியாளோ, ஆர்வத்துடனே ஆண்டவரின் பாதம் அமர்ந்து கற்றாள். **(லூக் 10:39)** "அவளுக்கு மரியாள் என்னப்பட்ட ஒரு சகோதரி இருந்தாள்; அவள் இயேசுவின் பாதத்தருகே உட்கார்ந்து, அவருடைய வசனத்தைக் கேட்டுக் கொண்டிருந்தாள்."

கர்த்தருடைய வார்த்தையினை தினந்தோறும் கேட்கின்ற பழக்கம் நமக்கு இருக்கின்றதா? அதனை தினமும் வாசிக்கின்றோமா? இரவும் பகலும் தியானிக்கின்றோமா? மேலும், ஆராய்ந்து பார்க்கின்றோமா? அல்லது நேரமில்லை என இந்த உலகத்தின் பின்னே, உலக காரியங்களுக்காக ஓடிக்கொண்டிருக்கின்றோமா?

லீதியாளைப் போல கர்த்தருடைய வார்த்தையை திறந்த மனதுடனே கற்போம் **(அப்போ 16:14).** எரேமியாவை போல கர்த்தருடைய வார்த்தையை கிடைத்தவடனே உட்கொள்கிறவர்களாக இருப்போம். **எரே 15:16** "உம்முடைய வார்த்தைகள் கிடைத்தவுடனே அவைகளை உட்கொண்டேன்; உம்முடைய வார்த்தைகள் எனக்குச் சந்தோஷமும், என் இருதயத்துக்கு மகிழ்ச்சியுமாயிருந்தது; சேனைகளின் தேவனாகிய கர்த்தாவே, உம்முடைய நாமம் எனக்குத் தரிக்கப்பட்டிருக்கிறது." மேலும், சங்கீதக்காரன் போல இருதயத்தில் பத்திரப்படுத்தி வைப்போம். **சங்கீதம் 119:11** "நான் உமக்கு விரோதமாயப் பாவஞ்செய்யாதபடிக்கு, உமது வாக்கை என்னிருதயத்தில் வைத்து வைத்தேன்."

அப்பொழுதுதான் இந்த கேட்பதில் உள்ள மதியிறுக்கத்தினை நாம் மேற்கொண்டு வெற்றி பெற முடியும் **வெளி 2:7** "ஆவியானவர் சபைகளுக்குச் சொல்லுகிறதைக் காதுள்ளவன் கேட்கக்கடவன்; ஜெயங்கொள்ளுகிறவனெவனோ அவனுக்குத் தேவனுடைய பரதீசின் மத்தியிலிருக்கிற ஜீவவிருட்சத்தின் கனியைப் புசிக்கக் கொடுப்பேன் என்றெழுது." மற்றும் நாம் பாக்கியவானாக, பாக்கியவதியாக முடியும் **சங்கீதம் 1:2** "கர்த்தருடைய வேதத்தில் பிரியமாயிருந்து, இரவும் பகலும் அவருடைய வேதத்தில் தியானமாயிருக்கிற மனுஷன் பாக்கியவான். அவன் நீர்க்கால்களின் ஓரமாய் நடப்பட்டு, தன் காலத்தில் தன் கனியைத் தந்து, இலையுதிராதிருக்கிற மரத்தைப் போலிருப்பான்; அவன் செய்வதெல்லாம் வாய்க்கும்."

2. விசுவாசிப்பதில் மதியிறுக்கம்

எபிரெயர் 4:2 "ஏனெனில், சுவிசேஷம் அவர்களுக்கு அறிவிக்கப்பட்டதுபோல நமக்கும் அறிவிக்கப்பட்டது கேட்டவர்கள் விசுவாசமில்லாமல் கேட்டபடியினால், அவர்கள் கேட்ட வசனம் அவர்களுக்குப் பிரயோஜனப்படவில்லை."

அடுத்ததாக நாம் விசுவாசிப்பதில் மதியிறுக்கம் என்ன என்பதனை அறிவோம். விசுவாசிப்பதில் மதியிறுக்கம் என்பது கற்றுக்கொண்ட கர்த்தருடைய வார்த்தையின் மீது நம்பிக்கைகொள்ளாமல் இருப்பது என்பதே விசுவாச மதியிறுக்கமாகும்.

ஆண்டவர் இயேசு அவர்கள் கண் முன்னே பிரமிப்பான காரியங்களை அதிசயமாக செய்திருந்தும், அவர்கள் அவரை நம்பவில்லை. அவர்கள் கண்கள் அடைக்கப்பட்டவர்களாய் இருந்தனர். அதாவது அதனை கண்டும் விசுவாசிக்கத் தக்க மனக்கண்கள் அற்றவர்களாக இருந்தனர் (மத்தேயு 13 15). அப்படி இருப்பது பாவம் என ஆண்டவர் இயேசு எச்சரித்தார் (யோவான் 9 41). அப்படிப்பட்டவர்களின் வாழ்க்கையில் கர்த்தர் செயல்படவும் மாட்டார்.

மத்தேயு 13:58 "அவர்களுடைய அவிசுவாசத்தினிமித்தம் அவர் அங்கே அநேக அற்புதங்களைச் செய்யவில்லை."

கர்த்தருடைய சத்தியத்தினை கேட்பது எவ்வளவு முக்கியமோ, அதனை முழுமனதோடு நம்புவதும் மிக முக்கியம்தான். கர்த்தருடைய வார்த்தையின் ஏதோ ஒரு பகுதியையோ, வசனத்தினையோ நாம் நம்ப மறுப்பது என்பது, முழு பைபிளையும் நம்ப மறுப்பதாகும். கர்த்தருடைய வார்த்தையை கேட்கும் போது நம் மனோநிலை எப்படிப்பட்டதாக இருக்கின்றது. கர்த்தருடைய வார்த்தையினை கேட்கும் போது நாம் அதன் மீது நம்பிக்கை கொண்டால், அது பயனுள்ளதாகவும், நம்ப மறுத்தால் பயனற்றதாகவும் இருக்கும் **(எபி 4:1,2).** ஆண்டவர் இயேசு அவருடைய வார்த்தையினால் அவரை விசுவாசிக்கிறவர்களுக்காக ஜெபித்தார் **யோவான் 17:20** "நான் இவர்களுக்காக வேண்டிக் கொள்ளுகிறதுமல்லாமல், இவர்களுடைய வார்த்தையினால் என்னை விசுவாசிக்கிறவர்களுக்காகவும் வேண்டிக்கொள்ளுகிறேன்."

நமக்குள் இருக்கும் நம்பிக்கை என்பது, கர்த்தர் நம் வாழ்வில் செய்த நன்மைகளை வைத்தோ, நாம் வேண்டியவைகள் கிடைத்ததை வைத்தோ இருக்க கூடாது. நமக்குள் இருக்கும் விசுவாசம் ஆபிரகாமை போல, அவருடைய வார்த்தையினாலே அவரை விசுவாசிப்பதாக இருக்க வேண்டும். **ரோமர் 10:17** "ஆதலால் விசுவாசம் கேள்வியினாலேவரும், கேள்வி தேவனுடைய வசனத்தினாலே வரும்."

ஆண்டவர் இயேசு, அப்போஸ்தலர்க்கும் நமக்கும் கொடுத்த பிரதான கட்டளை உலகமெங்கும் சென்று, எல்லா மனிதர்க்கும் நற்செய்தியை சொல்லுங்கள். அவைகளை கேட்டு, விசுவாசித்து கீழ்படிவோர் இரட்சிக்கப்படுவர் மற்றும் அவருடைய

வார்த்தையினை விசுவாசிக்க மறுப்போர் தண்டனை பெறுவர் என்றார். **மாற்கு 16:15,16** "பின்பு, அவர் அவர்களை நோக்கி: நீங்கள் உலகமெங்கும் போய், சர்வ சிருஷ்டிக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள். விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன். இரட்சிக்கப்படுவான்; விசுவாசியாதவனோ ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படுவான்."

அப்போஸ்தலர்களை அற்புதங்களை செய்யும்படி அல்ல, அவருடைய வார்த்தையை போதிக்க அனுப்பினார் **(மத்தேயு 28:18-20).** சத்திய ஆவியானவர் வரும்போது சகல சத்தியத்திற்குள்ளும் உங்களை நடத்துவார் என்றார் **(யோவான் 16:13).** ஆகையால் தான் முதலாம் நூற்றாண்டில் அப்போஸ்தலர்களும் மற்றும் திருச்சபையாரும் பல்வேறுபட்ட துன்பங்கள் மத்தியிலும் தொடர்ந்து நற்செய்தியை சொல்லிக்கொண்டே இருந்தனர் **(அப்போ 8:4).**

ஆகையால், நாம் கர்த்தருடைய வார்த்தை முழுவதையும் முழு மனதுடனே விசுவாசிப்போம். ஆம்! நம்மை விடுதலையாக்க வல்லமையுள்ள சத்தியத்தினை முழுமனதுடன் விசுவாசிப்போம் **(யோவான் 8:32).** ஏனெனில் கர்த்தருடைய வார்த்தை ஒருபோதும் தவறுவதில்லை. **ஏசா 55:10, 11** "மாரியும் உறைந்த மழையும் வானத்திலிருந்து இறங்கி, அவ்விடத்துக்குத் திரும்பாமல் பூமியை நனைத்து, அதில் முளை கிளம்பி விளையும்படிச் செய்து, விதைக்கிறவனுக்கு விதையையும், புசிக்கிறவனுக்கு ஆகாரத்தையும் கொடுக்கிறது எப்படியோ, அப்படியே என் வாயிலிருந்து புறப்படும் வசனமும் இருக்கும்; அது வெறுமையாய் என்னிடத்திற்குத் திரும்பாமல், அது நான் விரும்புகிறதைச் செய்து, நான் அதை அனுப்பின காரியமாகும்படி வாய்க்கும்."

3. மனந்திரும்புவதில் மதியிறுக்கம்

மத் 13:15 "இந்த ஜனங்கள் கண்களினால் காணாமலும், காதுகளினால் கேளாமலும், இருதயத்தினால் உணர்ந்து மனந்திரும்பாமலும், நான் அவர்களை ஆரோக்கியமாக்காமலும் இருக்கும்படியாக, அவர்கள் இருதயம் கொழுத்திருக்கிறது காதால் மந்தமாய்க் கேட்டு, தங்கள் கண்களை மூடிக்கொண்டார்கள் என்பதே."

அடுத்ததாக நாம் மனந்திரும்புவதில் மதியிறுக்கம் என்ன என்பதனை அறிவோம். மனந்திரும்புவதில் மதியிறுக்கம் என்பது கற்றுக்கொண்ட கர்த்தருடைய வார்த்தைய உணர்ந்து திருந்தாமல், தங்கள் பாவங்களிலே நிலைநிற்பது என்பதாகும்.

இந்த கடினமான மனநிலையை ஆண்டவர் இயேசு மிகவும் கடினமாக கடிந்து கொண்டார். அவர்கள் மீது வரும் பயங்கரமான அழிவை முன்னறிவித்தார். **லூக்கா 13:2,3** "இயேசு அவர்களுக்குப் பிரதியுத்தரமாக அந்தக் கலிலேயருக்கு அப்படிப்பட்டவைகள் சம்பவித்ததினாலே, மற்ற எல்லாக் கலிலேயரைப் பார்க்கிலும் அவர்கள் பாவிகளாயிருந்தார்களென்று நினைக்கிறீர்களோ? அப்படியல்லவென்று உங்களுக்குச் சொல்லுகிறேன் நீங்கள் மனந்திரும்பாமற்போனால் எல்லாரும் அப்படியே கெடுப்போவீர்கள்."

இப்படிப்பட்ட கடின மனது பார்வோனிடத்தில் இருந்தது. அவர் கடைசிவரை திருந்தவே இல்லை. தன் மனதினை கடினப்படுத்திக்கொண்டே சென்று, கடலில் மூழ்கி மரித்தும் போனார் **(யாத் 1-12 அதிகாரங்கள்).** அப்படி செய்வோரை பைபிள் பேதை என்கின்றது. **நீதிமொழி 27:12** "விவேகி ஆபத்தைக் கண்டு மறைந்து கொள்ளுகிறான் பேதைகளோ நெடுகப்போய்த் தண்டிக்கப்படுகிறார்கள்."

பார்வோன் தனக்கு திருந்தும்படியாக கர்த்தர் கொடுத்த வாய்ப்புகளை எல்லாம் வீணடித்தார். திருந்தும்படியாக கிடைத்த வாய்ப்புகளை வீணடிப்போர், இறுதியில் ஏசாவை போல வாய்ப்பின்றி போகும் நிலைக்கு தள்ளப்படுவார். **எபி 12:16,17** "ஒருவனும் வேசிக்கள்ளனாகவும், ஒரு வேளைப் போஜனத்துக்காகத் தன் சேஷ்டபுத்திரபாகத்தை விற்றுப்போட்ட ஏசாவைப் போலச் சீர்கெட்டவனாகவும் இராதபடிக்கும் எச்சரிக்கையாயிருங்கள். ஏனென்றால், பிற்பாடு அவன் ஆசீர்வாதத்தைச் சுதந்திரித்துக் கொள்ள விரும்பியும் ஆகாதவனென்று தள்ளப்பட்டதை அறிவீர்கள்; அவன் கண்ணீர்விட்டு, கவலையோடே தேடியும் மனம் மாறுதலைக் காணாமற்போனான்."

கர்த்தர் அவருடைய வார்த்தைகளின் மூலம் என்னிடம் பேசுகின்றார் என்பதனை உணராமல் வாழ்வதும், மற்றவர்களோடு ஒப்பிட்டு தங்களை தாங்களே மெச்சிக்கொண்டு தங்கள் தவறுகளை உணராமல் இருப்பதும் ஞானமற்ற செயலாகும். **2 கொரி 10:12** "ஆகிலும் தங்களைத்தாங்களே மெச்சிக் கொள்ளுகிற சிலருக்கு நாங்கள் எங்களைச் சரியாக்கவும் ஒப்பிடவும் துணியமாட்டோம்; தங்களைக்கொண்டு தங்களை அளந்துகொண்டு, தங்களுக்கே தங்களை ஒப்பிட்டுக்கொள்ளுகிற அவர்கள் புத்திமான்களல்ல.

சங்கீதக்காரன் தன் பிழைகளை உணர்கிறவன் யார்? என கேட்கின்றார். மேலும் தன்னை உணர்வுள்ளவனாக்கும்படி வேண்டுகின்றார்.

(சங் 19:12, 119:73, 125, 169). சாலமோனும் உணர்வுள்ள இருதயம் வேண்டி ஜெபித்து பெற்றுக் கொண்டார் **(1 இராஜா 3:12).** ஆகையால் நம் தவறுகள் மற்றும் பாவங்கள் கர்த்தருடைய வார்த்தையினாலே சுட்டிக்காட்டப்படும்போது உடனே நம்மை நாமே திருத்திக்கொள்வோம். அது கர்த்தர் நமக்கு தருகின்ற மிகப்பெரிய வாய்ப்பாகும் **(லூக்கா 13:6-9).**

4] அறிக்கையிடுவதில் மதியிறுக்கம்

யோவான் 12:42 "ஆகிலும் அதிகாரிகளிலும் அநேகர் அவரிடத்தில் விசுவாசம் வைத்தார்கள் அப்படியிருந்தும் ஜெப ஆலயத்துக்குப் புறம்பாக்கப்படாதபடி, பரிசேயர் நிமித்தம் அதை அறிக்கை பண்ணாதிருந்தார்கள்."

அடுத்ததாக நாம் அறிக்கையிடுவதில் மதியிறுக்கம் என்ன என்பதனை அறிவோம். அறிக்கையிடுவதில் மதியிறுக்கம் என்பது கர்த்தர் மீது தாங்கள் கொண்டுள்ள விசுவாசத்தினை அறிக்கையிடாமலிருப்பதும், இயேசுவே கிறிஸ்து என்றும், அவர் வேதவாக்கியங்களின்படியே நமது பாவங்களுக்காக மரித்தார், அடக்கம்பண்ணப் பட்டார். உயிர்த்தெழுந்தார் மற்றும் சதாகாலமும் ஜீவனோடிருக்கின்றார் என்றும் அறிக்கையிட மறப்பதும் மதியிறுக்கமாகும்.

ஆபிரகாம், கர்த்தரை விசுவாசித்தார். அது அவருடைய வாழ்வில் தேவநீதியாக எண்ணப்பட்டது. ரோம **ரோம 4:3** "வேதவாக்கியம் என்ன சொல்லுகிறது? ஆபிரகாம் தேவனை விசுவாசித்தான், அது அவனுக்கு நீதியாக எண்ணப்பட்டது என்று சொல்லுகிறது. ஆயினும் ஆபிரகாம், கர்த்தர் மீது தான் கொண்ட விசுவாசத்தினை செயலின் மூலமாகவும் **(ஆதியாகமம் 18:19).** மற்றும் வார்த்தையின் மூலமாகவும் அறிக்கை செய்தார். **ஆதியாகமம் 18:19** ''கர்த்தர் ஆபிரகாமுக்குச் சொன்னதை நிறைவேற்றும்படியாய் அவன் தன் பிள்ளைகளுக்கும், தனக்குப் பின்வரும் தன் வீட்டாருக்கும்; நீங்கள் நீதியையும் நியாயத்தையும் செய்து, கர்த்தருடைய வழியைக் காத்து நடவுங்கள் என்று கட்டளையிடுவான் என்பதை அறிந்திருக்கிறேன் என்றார்."

ஏனெனில், நம் வாழ்வில் தேவநீதி உண்டாக வேண்டுமென்றால் இருதயத்திலே விசுவாசிக்க வேண்டும். நமக்கு இரட்சிப்பு வேண்டுமென்றால் அவர் மீது நாம் கொண்டுள்ள விசுவாசத்தினை அறிக்கையிட்டே ஆகவேண்டும் என கர்த்தருடைய வார்த்தை உறுதியாக நம்மை வலியுறுத்துகின்றது. **ரோமர் 10:9,10** "என்னவென்றால், கர்த்தராகிய இயேசுவை நீ உன் வாயினாலே அறிக்கையிட்டு, தேவன் அவரை மரித்தோரிலிருந்து எழுப்பினாரென்று உன் இருதயத்திலே விசுவாசித்தால் இரட்சிக்கப்படுவாய். நீதியுண்டாக இருதயத்திலே விசுவாசிக்கப்படும், இரட்சிப்புண்டாக வாயினாலே அறிக்கை பண்ணப்படும்.

இரட்சிப்பை பெற்றுக்கொள்ள எத்தியோப்பிய மந்திரி தனது விசுவாசத்தினை அறிக்கை செய்தார் **(அப்போ 8:37).** இந்த முழு உலகும் இரட்சிக்கப்பட கிறிஸ்துவின் நற்செய்தியை நாம் அறிக்கை செய்ய வேண்டும். ஏனெனில் அதுவே இரட்சிப்பு உண்டாக தேவ பெலனாக இருக்கின்றது. **ரோமர் 1:16** ''கிறிஸ்துவின் சுவிசேஷத்தைக் குறித்து நான் வெட்கப்படேன்; முன்பு யூதரிலும் பின்பு கிரேக்கரிலும் விசுவாசிக்கிறவனெவனோ அவனுக்கு இரட்சிப்பு உண்டாவதற்கு அது தேவபெலனாயிருக்கிறது.

மேலும், நற்செய்தியை அறிவிப்பது நம்மேல் விழுந்த கடமையாகவும் இருக்கின்றது. அதனால் அந்த பொறுப்பை உணர்ந்து உற்சாகத்துடனே அறிவிப்போம். **(1 கொரி 9:15, 16).** இரண்டாயிரம் ஆண்டுகளாக இந்த நற்செய்தி உலகமெங்கும் அறிவிக்கப்பட்டு நம்மிடம் வந்திருக்கின்றது. நாம் அதனை மற்றவர்களும் இரட்சிக்கப்படும்படி அவர்களுக்கும் அறிவிப்போம். ஏனெனில் சத்தியத்தினை அறிவியாமலிருப்பது அநீயாயமாகும். அது தேவ தண்டனையை உண்டாக்கும். **(ரோமர் 1:18).** ஆகையால், குறைந்த பட்சமாக ஒரு நாளைக்கு ஒருவருக்காவது நற்செய்தியை அறிவிப்போம் என தீர்மானங்கொண்டு செயல்படுவோம்.

5] கீழ்படிவதில் மதியிறுக்கம்

மத்தேயு 7:21 "பரலோகத்திலிருக்கிற என் பிதாவின் சித்தத்தின்படி செய்கிறவனே பரலோகராஜ்யத்தில் பிரவேசிப்பானேயல்லாமல், என்னை நோக்கி; கர்த்தாவே! கர்த்தாவே! என்று சொல்லுகிறவன் அதில் பிரவேசிப்பதில்லை."

கடைசியாக, நாம் கீழ்படிவதில் மதியிறுக்கம் என்ன என்பதனை அறிவோம். கீழ்படிவதில் மதியிறுக்கம் என்பது கர்த்தருடைய வார்த்தைக்கு கீழ்ப்படியாமல் இருப்பதாகும். கர்த்தருடைய வார்த்தைக்கு கீழ்ப்படிவதற்கு பதில் கீழ்ப்படியாமல் இருக்க என்ன நியாயமான காரணம் சொல்லலாம் என யோசிப்பவர்களும், சொல்பவர்களும் அரசனாகிய

சவுலை போல கீழ்ப்படிதலில் மதியிறுக்கம் கொண்டவர்களாக இருக்கின்றனர்.

அப்படிபட்டவர்கள் புரிந்துகொள்ள வேண்டியது என்னவெனில், கீழ்ப்படிவதலுக்கு பதிலீடாக ஒன்றையும் வைக்க முடியாது என்பதே ஆகும். **1 சாமுவேல் 15:22, 23** "அதற்குச் சாமுவேல்; கர்த்தருடைய சத்தத்துக்குக் கீழ்ப்படிகிறதைப் பார்க்கிலும், சர்வாங்க தகனங்களும் பலிகளும் கர்த்தருக்குப் பிரியமாயிருக்குமே? பலியைப் பார்க்கிலும் கீழ்ப்படிதலும், ஆட்டுக்கடாக்களின் நிணத்தைப்பார்க்கிலும் செவி கொடுத்தலும் உத்தமம். இரண்டகம் பண்ணுதல் பில்லிசூனியப்பாவத்துக்கும், முரட்டாட்டம் பண்ணுதல் அவபக்திக்கும் விக்கிரகாராதனைக்கும் சரியாய் இருக்கிறது; நீர் கர்த்தருடைய வார்த்தையைப் புறக்கணித்தப்படியினாலே, அவர் உம்மை ராஜாவாயிராதபடிக்குப் புறக்கணித்துத் தள்ளினார் என்றான்.

ஆண்டவர் இயேசு கீழ்ப்படிதலுக்கும் அன்பிற்கும் உள்ள தொடர்பினை பற்றியும், அன்பினாலே கீழ்படிவோர் பெறுவோர் நன்மைகளையும், கீழ்ப்படியாதவர்கள் சந்திக்கும் விளைவுகளை பற்றியும் தெளிவாக போதித்துள்ளார். **யோவான் 14:21,23,24** 'என் கற்பனைகளைப் பெற்றுக் கொண்டு அவைகளைக் கைக்கொள்ளுகிறவனே என்னிடத்தில் அன்பாயிருக்கிறான், என்னிடத்தில் அன்பாயிருக்கிறவன் என் பிதாவுக்கு அன்பாயிருப்பான்; நானும் அவனில் அன்பாயிருந்து, அவனுக்கு என்னை வெளிப்படுத்துவேன் என்றார். இயேசு அவனுக்குப் பிரதியுத்தரமாக; ஒருவன் என்னில் அன்பாயிருந்தால், அவன் என் வசனத்தைக் கைக்கொள்ளுவான், அவனில் என் பிதா அன்பாயிருப்பார்; நாங்கள் அவனிடத்தில் வந்து அவனோடே வாசம் பண்ணுவோம். என்னில் அன்பாயிராதவன் என் வசனங்களைக் கைக்கொள்ள மாட்டான். நீங்கள் கேட்கிற வசனம் என்னுடையதாயிராமல் என்னை அனுப்பின பிதாவினுடையதாயிருக்கிறது.

நாம் பரலோக பிதாவின் மீதும், கிறிஸ்துவின் மீதும் அன்புள்ளவர்களாக இருக்கின்றபடியினாலே, அவருடைய சத்தம் (வார்த்தை) கேட்கும் ஒவ்வொரு முறையும் அதற்கு கீழ்படியதக்கதாக நம்மையே அடிமையாக அர்ப்பணிப்போம். **ரோமர் 6:17** "முன்னே நீங்கள் பாவத்திற்கு அடிமைகளாயிருந்தும், இப்பொழுது உங்களுக்கு ஒப்புவிக்கப்பட்ட உபதேச சட்டத்திற்கு நீங்கள் மனப்பூர்வமாய்க் கீழ்படிந்ததினாலே தேவனுக்கு ஸ்தோத்திரம்.

மனிதர்களின் யோசனைகளிற்கு மதிப்பளித்து கர்த்தருடைய வார்த்தையை புறந்தள்ள வேண்டாம் **(மார்கு 7:9).** ஏனெனில் கர்த்தருடைய வார்த்தைக்கு கீழ்ப்படியாமல் இருப்பது நமக்கு பேராபத்தினை கொண்டு வரும். **யோவான் 12:48** ''என்னைத் தள்ளி என் வார்த்தைகளை ஏற்றுக்கொள்ளாதவனை நியாயந்தீர்க்கிற தொன்றிருக்கிறது; நான் சொன்ன வசனமே அவனைக் கடைசி நாளில் நியாயந்தீர்க்கும். ஆகையால் கர்த்தருடைய வார்த்தைக்கு கீழ்ப்படிவதை தாமதிக்கவும் வேண்டாம், தள்ளிப்போடவும் வேண்டாம் மற்றும் தவிர்க்கவும் வேண்டாம் **(கலா 1:15-24).**

இறுதியாக, பிரியமானவர்களே! நோய் என்றால் குணமாக்கப்பட வேண்டிய கட்டாயமல்லவா? ஏனெனில் யாரும் நோயுடனே வாழ விரும்பமாட்டோம். இந்த ஆத்மீக மதியிறுக்கத்தினை (மன இறுக்கத்தினை) எவைகளிளெல்லாம் சரிசெய்ய வேண்டும் என்பதனை கற்றறிந்து மாற்றுவதே சாலச் சிறந்ததாகும். இந்த தியானத்தின் வழியாக ஆவியானவர் எந்த காரியங்களிலாவது நமக்கான மதியிறுக்கத்தினை வெளிப்படுத்தினார் என்றால் அதனை தாமதமின்றி உடனே சரிசெய்வோம். நமக்காக ஆண்டவர் இயேசு ஆயத்தம் பண்ணின நித்திய வீட்டுக்குச் செல்ல நம்மையே ஆயத்தப்படுத்துவோம். கர்த்தர் தாமே இந்த தெய்வீக காரியங்களில் நமக்கு வெற்றியை கட்டளையிடுவாராக.

அன்புடன்,
-ஆசிரியர்

சிறுவர்க்கான கேள்விகள்

குட்டீஸ், கீழே உள்ள கட்டங்களில் கர்த்தருக்கு கீழ்படியாத 10 நபர்களின் பெயர்கள் மறைந்துள்ளன, அவைகளை கண்டுபிடித்து எழுதி அனுப்புங்க...

பே	ச	வு	ல்	ரா	ஜா	அ	து	அ
லி	ல்	ரா	பி	ரா	ள்	கி	ரோ	கி
க்	ன்	யீ	கா		து	ரி	ஏ	ரி
ஸ்	ல்	ரா	து	ஸ்	ரோ	பா	ப்	ப்
யூ	தா	ஸ்	கா	ரி	யோ	த்	பா	பா
ள்	வா	ஏ	ஸ்	பெ	து	பா	அ	அ
கா	ரி	யோ	பா	ர்	வோ	ன்	யோ	த்
ச	ப்	பி	ரா	ள்	து	து	ஸ்	பெ

அன்பான சகோதரிகள் அனைவருக்கும் நமது ஆண்டவர் இயேசுகிறிஸ்துவின் நாமத்தினாலே அன்பின் வாழ்த்துக்கள்.

இந்த மாதம் ஆத்தும மதியிறுக்கமான பெண்ணாகிய சப்பிராளிடமிருந்து ஒரு எச்சரிக்கையின் பாடத்தினை படிக்கலாமா?

சப்பிராளை பற்றி அப்போஸ்தலர் நடபடிகள் புத்தகத்தில் 5ம் அதிகாரத்தில் நாம் படிக்கின்றோம். இந்த வரலாற்று நிகழ்ச்சி நமக்கு நன்கு பரிச்சியமானதுதான். இந்த சப்பிராள் ஆத்தும மதியிறுக்கமான (மன இறுக்கமான) பெண்ணாக எவ்வாறு செயல்பட்டாள் என்பதனை அறிந்து கொள்வது நமக்கு எச்சரிப்பை உண்டாக்கி நித்திய வாழ்வின் வழியிலே நடக்க நிச்சயம் உதவும் என்பது எனது உறுதியான நம்பிக்கை.

1. சப்பிராள் பொய் பேச முடிவெடுத்தாள்

அப் 5:1,2 அனனியா என்னும் பேருள்ள ஒருவனும், அவனுடைய மனைவியாகிய சப்பீராளும் தங்கள் காணியாட்சியை விற்றார்கள். தன் மனைவி அறிய அவன் கிரயத்திலே ஒரு பங்கை வஞ்சித்து வைத்து, ஒரு பங்கைக் கொண்டுவந்து, அப்போஸ்தலருடைய பாதத்திலே வைத்தான்.

முதலாவதாக சப்பிராள் பொய் பேச முடிவெடுத்தாள் என காண்கின்றோம். எந்த ஒரு பாவத்தினையும் மனிதன் மனதறிந்தே பெரும்பாலும் செய்கின்றான். நாம் திட்டமிடாமல் பொய் பேசினேன் என சொல்பவர்கள் உண்மையிலேயே திட்டமிடாமல் பேசவில்லை. காரணம் இது தெரிஞ்சா நம்மை திட்டுவார்கள், அடிப்பார்கள் மற்றும் தரக்குறைவாக நினைப்பார்கள். இப்படி செய்வது தான் புத்திசாலித்தனம் அல்லது ஏதாவது ஆபத்து வரும் என எண்ணும்போதே, பொய் பேசுவதற்கான திட்டமும் விருப்பமும், பாவம் செய்வதற்கான காரணமும் அவர்களுக்குள் உருவாகிவிடுகின்றது. அதனால் தான் வேத வசனமும் அவரவர் இச்சையினாலே பாவம் செய்கின்றனர் என்கின்றது.

யாக் 1:14,15 அவனவன் தன்தன் சுய இச்சையினாலே இழுக்கப்பட்டு, சிக்குண்டு, சோதிக்கப்படுகிறான். பின்பு இச்சையானது கர்ப்பந்தரித்து, பாவத்தைப் பிறப்பிக்கும்; பாவம் பூரணமாகும்போது, மரணத்தைப் பிறப்பிக்கும்.

ஆபத்திற்கு பாவமில்லை பொய் பேசலாம் என எண்ணுகின்றனர். ஆயினும் அவர்கள் பேசப் போகின்ற பொய் தான் பேராபத்தினை உண்டாக்கும் என்கின்ற உண்மையை எண்ண மறுக்கின்றனர். தீமை எந்த வகையிலும் நன்மை பயக்காது. அதாவது தீமையினால் நன்மை உண்டாகாது. அதே போல் தான் பாவமும் என்பதனை நாம் உணர வேண்டும். அந்த சூழ்நிலையில் பொய்யினால் நன்மை நடந்தது போல தோன்றலாம், பொய் பேசினதின் விளைவும் நன்மையை போல தோற்றுவிக்கப்படலாம். ஆயினும் அது உண்மையல்ல. அதன் விளைவு பெரும் தீமையை உண்டாக்கும். ஆபிரகாம் பேசின பொய், பேசின சூழலில் அது ஆபிரகாமிற்கு அவரது உயிரை காப்பாற்றியது போல இருந்திருக்கும். மேலும் அந்த பொய்யினால் நிறைய வெகுமதியும் கிடைக்கப் பெற்றான். ஆனால், அவன் பேசினது பொய் என்று தெரிந்த உடனே அவனது நற்பெயருக்கு அது களங்கத்தினை தான் உண்டாக்கியது **(ஆதியாகமம் 12 10–20).**

2. சப்பிராள் பொய் பேசினாள்

அப் 5:7,8 ஏறக்குறைய மூன்று மணி நேரத்துக்குப் பின்பு, அவனுடைய மனைவி நடந்ததை அறியாமல், உள்ளே வந்தாள். பேதுரு அவளை நோக்கி: நிலத்தை இவ்வளவுக்குத்தானா விற்றீர்கள்? எனக்குச் சொல் என்றான். அவள்: ஆம், இவ்வளவுக்குத்தான் என்றாள்.

அடுத்ததாக நாம் சப்பிராளிடம் காண்கின்றது என்னவெனில் அவள் பொய் பேசினாள். அவள் கணவன் மரித்த நிலைகூட அறியாமல், அவள் சபைக்குள் வருகின்றாள். அவள் அறியாமலே அவளது கணவன் அடக்கம் செய்யப்பட்டான் என்பதும் வியப்பான உண்மையாகவே இருக்கின்றது. சபைக்குள்ளே வந்து அவள் பேதுருவின் கேள்விக்கு பதிலாக பொய் பேசினாள் என்பது நாம் அறிந்ததே.

சப்பிராளுக்கு என்ன ஒரு துணிகரம்? கர்த்தருடைய சமூகத்தில் பொய் பேச பொய்களின் பிதாவாகிய சாத்தான்கூட அஞ்சுவான் என்றே எண்ணுகின்றேன். இன்றைய நாட்களிலும் சப்பிராளை போன்றே கர்த்தருக்கு கொடுக்கின்ற

காரியத்தில் பொய் பேசுகின்ற. வஞ்சிக்கின்றவர்களை நாம் காண முடியும். இப்படிப்பட்ட காரியத்தினை செய்த யூதர்களை கடிந்துக்கொண்டு அது சாபம் என கர்த்தர் எச்சரித்ததை மல்கியா புத்தகத்தில் நாம் வாசிக்கின்றோம்.

மல்கியா 3:8-10 "மனுஷன் தேவனை வஞ்சிக்கலாமா? நீங்களோ என்னை வஞ்சிக்கிறீர்கள். எதிலே உம்மை வஞ்சித்தோம் என்கிறீர்கள்? தசமபாகத்திலும் காணிக்கைகளிலுந்தானே. நீங்கள் சபிக்கப்பட்டவர்கள்; ஜனத்தாராகிய நீங்கள் எல்லாரும் என்னை வஞ்சித்தீர்கள். என் ஆலயத்தில் ஆகாரம் உண்டாயிருக்கும்படித் தசமபாகங்களையெல்லாம் பண்டசாலையிலே கொண்டு வாருங்கள்; அப்பொழுது நான் வானத்தின் பலகணிகளைத் திறந்து, இடங்கொள்ளாமற்போகுமட்டும் உங்கள் மேல் ஆசீர்வாதத்தை வருஷிக்கமாட்டேனோவென்று அதினால் என்னைச் சோதித்துப் பாருங்கள் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார்."

ஒன்றை புரிந்துக்கொள்ள முடிகின்றது. இன்று நேற்றல்ல பணம் என்று வந்தால், கர்த்தரிடமே பொய் பேசி அவரையே ஏமாற்றுகின்ற ஒரு அவலட்சண குணம் மனிதர்களுக்கு இருந்திருக்கின்றது. அப்படிப்பட்டவர்கள் இதனை விட்டு உடனடியாகவும் உறுதியாகவும் மனந்திருந்தியே ஆக வேண்டும். இல்லையேல் தண்டனை நிச்சயம் **(நீதிமொழி 27:12).**

3. சப்பிராள் பொய்யிலே நிலைநின்றாள்

அப் 5:9,10 பேதுரு அவளை நோக்கி கர்த்தருடைய ஆவியைச் சோதிக்கிறதற்கு நீங்கள் ஒருமனப்பட்டதென்ன? இதோ, உன் புருசனை அடக்கம் பண்ணினவர்களுடைய கால்களும் வாசற்படியிலே வந்திருக்கிறது. உன்னையும் வெளியே கொண்டு போவார்கள் என்றான். உடனே அவள் அவனுடைய பாத்தில் விழுந்து ஜீவனை விட்டாள். வாலிபர் உள்ளே வந்து, அவள் மரித்துப் போனதைக் கண்டு, அவளை வெளியே எடுத்துக் கொண்டுபோய், அவளுடைய புருஷனண்டையிலே அடக்கம் பண்ணினார்கள்.

சபைக்குள்ளே வந்து அவள் பேதுருவின் கேள்விக்கு பதிலாக பொய் பேசினாள் என்பது நாம் அறிந்ததே. என்னை பொறுத்தவரை அவள் பொய் பேச முடிவெடுத்தாள் அல்லவா அங்கேயே அவள் பொய் பேசிவிட்டாள் தான், தன்னுடைய பொய்யை இங்கே உறுதிபடுத்துகின்றாள் என்பதாகதான் நான் உணர்கின்றேன்.

ஒருவர் பாவம் செய்ய மனதில்கொள்ளும் விருப்பம் கொள்ளும்போதே அந்த பாவத்தினை செய்து விட்டார் என ஆண்டவர் இயேசுவின் போதனையின்படி அவள் பாவம் செய்துவிட்டாள். இங்கே அந்த பாவத்தில் உறுதியாக நிற்கின்றதையே நாம் உணர்கின்றோம். ஏனெனில் கர்த்தருடைய ஆவியை சோதிக்க நீங்கள் ஒருமனப்பட்டதென்ன என பேதுரு கேட்ட மாத்திரத்தில் மாயவித்தைக்காரனாகிய சீமோனை போல மன்னிப்பு கேட்டிருப்பாள் அல்லவா. அவளது அமைதி அவள் பாவத்தில் நிலைநிற்பதையே வெளிப்படுத்துகின்றது. அதனால் தண்டிக்கப்பட்டாள். ஏனெனில் பாவத்தின் சம்பளம் மரணம் **(ரோமர் 6:23).**

இறுதியாக, பிரியமான சகோதரிகளே, யார் இந்த சப்பிராள்? இவள் ஒரு உலக பெண்மணி அல்ல. சத்தியத்தினை கேட்டு, மனதார விசுவாசித்து, செய்த பாவங்களிலிருந்து மனந்திரும்பி, விசுவாச அறிக்கை செய்து, திருமுழுக்கு பெற்று இரட்சிக்கப்பட்டவர். அது மாத்திரமா? சபைக்கு ஒரு தேவை என்று வந்தபோது, தங்களுடைய நிலத்தினை விற்று கொடுக்க முடிவெடுத்து, அதனை நிறைவேற்றியவள். இங்கே தவறு எங்கே நடக்கின்றது? எல்லா தீமைக்கும் வேரான பண ஆசைக்கு உட்பட்டு **(1 தீமோ 6:10).** சாத்தானுக்கு இடமளித்தாள் **(எபே 4:27).** அதின் பயங்கரமான விளைவையும் அனுபவித்தாள். கர்த்தருடைய வார்த்தை நம் பாவங்களை சுட்டிக்காட்டும்போது, கர்த்தர் தாமே நம்மை அதற்கு நேராக வழிநடத்துவராக.

— பேபி ராஜா

சிறுவர் பகுதி பதில் எழுதியவர்கள்

1. A. ஹானா ஜோதி - மதுரை
2. M. ராஜா - கரூர்
3. M. ஜோனா - கரூர்
4. A. கார்பஸ் பிலேமோன் - மதுரை
5. பிரசன்னா - சித்தோடு

அகிரிப்பா, பெஸ்து, பேலிக்ஸ்

அன்பான வாலிபர்களே! உங்கள் அனைவரையும் இறைமைந்தன் இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் வாழ்த்துவதில் மகிழ்ச்சியடைகின்றேன். சில நன்மையானவற்றை நம்முடைய வாழ்விலே சேர்த்துக்கொள்வதற்கு சில தீமையானவற்றை விட்டுவிட்டால் மட்டுமே அந்த நன்மையை முழுமையாக அனுபவிக்க முடியும். அப்படித்தான் கடவுள் காரியங்களிலும். கடவுள் தரும் பரிபூரண நன்மையை அனுபவிக்க வேண்டுமென்றால், நம்மிடம் இருக்கின்ற உலகம் சார்ந்த தீமையானவற்றை முழுவதுமாகவிட்டுவிட வேண்டும்.

இந்த மாதம் மூன்று பெரிய பதவிகளிலிருந்த நபர்களைப் பற்றி படிக்க இருக்கின்றோம்.

1. சேனாதிபதி - பேலிக்ஸ் 2. தேசாதிபதி - பெஸ்து 3. ராஜா - அகிரிப்பா

அப். 24:24-ல் இந்த சேனாதிபதி பேலிக்ஸ் தன் மனைவி துருசில்லாளுடனே கூட வந்து, பவுல் மூலமாக கிறிஸ்துவைப் பற்றும் விசுவாசத்தைக் குறித்தும், நீதியையும், இச்சையடக்கத்தையும், இனிவரும் நியாயத்தீர்ப்பையும் குறித்து கேள்விப்பட்டு பயமடைந்தான்.

நல்லவராகத்தான் தெரிகின்றார் சபைக்கு சென்று கர்த்தருடைய வார்த்தையினால் வரும் விசுவாசம், கர்த்தருடைய நீதியினால் வரும் பயம், நியாயத் தீர்ப்பை எதிர்கொள்ளும் நம்பிக்கை, இதெல்லாம் சபை ஐக்கியத்தோடு இருக்கும் வரை மட்டுமே, வெளியில் வந்துவிட்டால் அத்தனையும் மறந்து உலகோடு ஒத்துப் போகின்ற ஒரு உப்பு சப்பில்லாத வாழ்க்கையைத் தான் அநேகரிடம் பார்க்க முடிகின்றது.

இந்த பேலிக்ஸ் கர்த்தருடைய வார்த்தையை அலட்சியம் செய்கிறவராக மட்டும் இருந்துவிடவில்லை. **அப் 24:26-ல்** அவர் ஒரு பணத்தாசை பிடித்தவராகவும் இருந்தார். (**1 தீமோ 6:10** பண ஆசை எல்லாத் தீமைக்கும் வேராயிருக்கிறது.) இந்த வசனம் பேலிக்ஸினுடைய வாழ்வில் எவ்வளவு உண்மையாயிருக்கிறது. பணம் சத்தியத்தை அறியும் அறிவை தள்ளி உலகை நேசிக்க வைத்து சேனாதிபதி பேலிக்ஸை மனமாற்றமடையாமல் உலகின் இச்சைக்கு கொண்டு போய் விட்டது. **(ரோம 6:23)** இயேசு கிறிஸ்துவினால் உண்டான நித்திய ஜீவனை பெற உலக ஐசுவரியத்தை நாடாமல் சத்தியத்திற்கு செவிமடுப்போம். உலக ஆசையை வெல்வோம். இல்லாவிட்டால் ஆத்தும மரணம் என்பது உறுதி, பேலிக்ஸை போல.!

அடுத்து நாம் பார்ப்பது தேசாதிபதி பெஸ்து இவராகிலும் நல்லவரா என்று பார்த்தால் அங்கும் பவுலுக்கு ஏமாற்றமே. இவர் தனக்கு கொடுக்கப்பட்ட பதவிக்கு சற்றும் ஏற்புடையவரல்ல. குற்றத்தைத் தீர விசாரிக்கும் திறனற்றவராகவும். தன் பதவியை காத்துக்கொள்ள சத்தியத்தையும் மீறுகிறவராகவும் ஒருதலைபட்சமாக நியாயம் செய்கிறவராகவும் இருந்தார். (**அப் 25:9** பெஸ்து யூதருக்கு தயவு பண்ண மனதாய்). அநேகர் இயேசுவின் பக்கம் நிற்காமல் இருக்கலாம். அதனால் இயேசு இல்லை என்னும் சத்தியம் பொய் என்றும் ஆகிவிடாது. இயேசுவையும் அவருடைய சத்தியத்தையும் தெரிந்திருக்க நாம் அவருக்காக நிற்க வேண்டும். பெஸ்துவைப் போல மற்றவர்களுக்காக வாழாமல் இயேசுவுக்காய் மனந்திரும்பி வாழ்வோம். இந்தப் பெஸ்து மறுபடியும் பவுல் மூலமாக இயேசுவையும் அவருடைய உபதேசத்தையும் முழுவதுமாக கேட்டும் உணர்வடையாமல் மனந்திரும்பாமல் **அப் 26:24-ல்** "பவுலே நீ பிதற்றுகிறாய்" என்றார். கர்த்தருடைய வார்த்தை அவருக்கு பிதற்றலாயிருந்தது. நமக்கும் அப்படியிருக்கிறதா? நம்மை மாற்றிக் கொள்வோம். இன்றே கர்த்தருடைய வார்த்தைக்கு முழுவதுமாக கீழ்ப்படிவோம்.

மூன்றாவதாக, அகிரிப்பா ராஜா! இவர் முதலில் பார்த்த இருவரைவிட கொஞ்சம் நல்லவராக தெரிகின்றார். பவுல் மூலமாக மிக துல்லியமாகவே சத்தியத்தை கேட்டு கீழ்படியும் அளவுக்கு வந்து விடுகிறார். அநேக வேலைகளில் நாமும் அப்படித்தான். ஆர்வமாய் சபைக்கு செல்வோம். திருசத்தியத்தை முழு மனதாய் கேட்போம். ஆனால் கிரியைகள் என்று வரும்போது பின்னடைவே. அப்படித்தான் இந்த அகிரிப்பா ராஜாவும் (**அப் 26:28** நான் கிறிஸ்தவனாகிறதற்குக் கொஞ்சங்குறையை நீ என்னைச் சம்மதிக்கப் பண்ணுகிறாய் என்றான்) மனந்திரும்புவதற்கு இன்னும் ஒருபடி இருக்கும் நிலையில் பின்வாங்கி போன இந்த ராஜாவைப் பார்த்தீர்களா! இவரைப் போல நாமும் இருப்போமானால் மிகவும் பரிதவிக்கப்பட்ட நிலைக்கு தள்ளப்படுவோம். **(வெளி 1:3)** திருசத்தியத்தை கேட்பது மட்டுமல்லாமல் அதன்படி வாழவும் வளரவும் நம்மை ஒப்புக் கொடுப்போம். இந்த முயற்சிகளில் தேவன் தாமே நம்மோடு உடன் இருப்பாராக.

– உங்கள் அண்ணன்

JP

யூதாஸ் காரியோத்

சிறுவர் பகுதி

கடவுளுக்கு பிரியமான அன்பு தம்பி தங்கைகளா! நீங்கள் எல்லாரும் எப்படியிருக்கிறீர்கள், நல்லாயிருக்கிறீர்களா? போன மாதம் பைபிள் சம்பவங்களை படித்தீர்களா? உங்களை போன்ற சிறுவர்களுக்கு இதை அறிமும் செய்தீர்களா?

இப்பொழுதுக்கூட யூதாஸ் காரியோத் என்பவரிட மிருந்து பாடங்களை கற்றுக்கொள்ளலாமா?

இயேசு தன்னுடன் ஊழியத்திற்கு 12 சீஷர்களை தெரிந்தெடுத்தார். அந்த 12 சீஷர்களில் யூதாஸ் காரியோத் என்பவரும் ஒருவர் ஆவார். இந்த அண்ணன் பாருங்க, இயேசு எங்கு போனாலும் கூடவே போவாங்க. இவங்களுக்கு முக்கியமான பொறுப்பு கொடுக்கப்பட்டது. என்ன தெரியுமா? இவர் தான் பொருளாளர். எப்பொழுதும் பணப்பை யூதாஸ் அண்ணனிடம்தான் இருக்கும். இயேசு அநேகருக்கு பரலோக ராஜ்யத்தை குறித்துப் பேசினார். சீஷர் களிடமும் அதைதான் கற்றுக் கொடுத்தார். நீங்கள் உலகம் எங்கும் போய் சுவிசேஷத்தை பிரசங்கி யுங்கள் என்று சொன்னார்.

இயேசுவின் எதிர்பார்ப்பு, ஏக்கம், எல்லாம் ஆத்தும தாகத்தோடு எல்லாருக்கும் இரட்சிப்பின் செய்தியை சொல்லவேண்டும் என்பதுதான்.

ஆனால், இந்த யூதாஸ் அண்ணன் என்ன செய்தாங்க தெரியுமா? இயேசுவுக்கு எதிராக இருப்பவர்களோடு பணத்தை வாங்கிக்கொண்டு, அவரை கொலை செய்யும் படி காட்டிக் கொடுத்து விட்டாங்க.

இயேசுவின் கூடவே இருந்து அவருக்கு துரோகம் செய்திட்டாங்க. அதுமட்டுமல்ல, பண ஆசை அவங்களுக்குள் வந்தது. இயேசு ஆண்டவர் கொலை செய்ய காரணமாக மாறிவிட்டாங்க.

ரோம போர் சேவர்கள் என்ன செய்தார்கள் தெரியுமா இயேசுவை பிடித்து, வாரினால் அடித்தார்கள். அவரை ரொம்ப கஷ்டபடுத்தினார்கள். கடைசியாக சிலுவையில் அடித்தார்கள்.

யூதாஸ் அண்ணன் தான் செய்த தவறை நினைத்து இயேசுவிடம் மன்னிப்பு கேட்காமல், இயேசுவை கொலை செய்ய திட்டம்



போட்டவர்களிடம் மன்னிப்பு கேட்டாங்க. மன்னிப்பு கிடைக்கவில்லை. ஆண்டவர் இயேசுவின் கூடவே இருந்தும் மனம் திருந்த வில்லை.

கடவுளுக்கு பிரியமான பிள்ளைகளா! இயேசு கூடவே இருந்து பைபிள் படிக்கல, ஜெபிக்கல, சபைக்குபோகல, அம்மா அப்பாவுக்கு கீழ்படியல, ஆசிரியர்களுக்கு கீழ்படியல இயேசுவை பற்றி மற்றவர்களுக்கு சொல்லல என்றால் நாமும் யூதாஸ் அண்ணன் மாதிரிதான். நீங்களும் நானும் இயேசுவை கஷ்டப்படுத்துவோம். அப்படி இல்லாமல் நல்ல பிள்ளைகளாக இருப்பீர்களா? கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பார்.

வைப்பாட்டு வசனம் : 1 தீமோத்தேயு 6:10
''பண ஆசை எல்லாத் தீமைக்கும் வேராயிருக்கிறது; சிலர் அதை இச்சித்து, விசுவாசத்தை விட்டு வழுவி, அநேக வேதனைகளாலே தங்களை உருவக்குத்திக் கொண்டிருக்கிறார்கள்.

– அன்பு ஏசுதாஸ்

ஏரோது ராஜா

சிறுவர் பகுதி

ஹாய் குட்டீஸ்! உங்க எல்லாருக்கும் ஆண்டவர் இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் வாழ்த்தக்கள்.

யூதேயா மாநிலத்தினை ஏரோது ராஜா ஆண்டு வந்தார். இந்த ஏரோது, கர்த்தருக்கு பயப்படாமல் இருந்தார். கிறிஸ்துவின் சபையானது நன்றாக வளர்ந்து கொண்டிருந்த காலம் அது. அப்பொழுது ஏரோது ராஜா என்ன செய்தார் தெரியுமா?

சபை மக்களில் சிலரை மிகவும் துன்பப்படுத்தினார். அது மாத்திரமா? ஆண்டவர் இயேசுவினால் இடிமுழக்க மக்கள் என பெயர் வாங்கிய அப்போஸ்தலராகிய யாக்கோபை பிடித்து, பட்டயத் தினாலே வெட்டி கொன்றார். இந்த யாக்கோபு, யோவானின் சகோதரன் ஆவார்.

ஏரோது ராஜாவின் இந்த செயல், கிறிஸ்தவர்களை வெறுத்த யூதர்களுக்கு பிடித்து போனதால், அவர்களை பிரியபடுத்த மனதாய் அப்போஸ்தலனாகிய பேதுருவையும் பிடித்து கொலை செய்யும்படி சிறையில் அடைத்தான். அது யூதர்களின் பண்டிகை காலம் என்பதால், ஒரு பிரிவிற்கு 4

காவலர்கள் என நான்கு பிரிவாக காவலர்களை காவல் காக்க வைத்து, பேதுருவை எப்படியும் கொல்ல ஆயத்தமாயிருந்தான் மற்றும் ஆசையாக இருந்தான்.

சபை மக்கள் அனைவரும் ஒன்று கூடி பேதுருவிற்காக ஜெபம் செய்தனர். கர்த்தர் அற்புதமாக பேதுருவை சிறையிலிருந்து காப்பாற்றினார். பண்டிகை முடிந்து வந்து ஏரோது சிறைச்சாலையில் பார்க்கும்போது, அங்கே பேதுரு இல்லாததினால், தன் தவறை உணர்ந்து திருந்தாமல், கோபமடைந்து சிறைக்காவலர்களை கொன்று போட்டான்.

மேலும், ஏரோது ராஜா ஒரு நாள் மக்களிடையே நீண்ட பிரசங்கம் செய்தார். ஏரோதின் பேச்சை கேட்ட மக்கள் இது மனித சத்தம் அல்ல தேவ சத்தம் என அவனை புகழ்ந்தனர். மக்கள் தன்னை கடவுளுக்கு சமமாக்கி புகழ்ந்ததை நினைத்து பெருமை கொண்டார். இப்பொழுதும் பாருங்கள், தான் சாதாரண மனிதன் என தாழ்மையாக திருந்தாமல், பெருமை கொண்டார். ஆகையினால் கர்த்தர் அவரை தண்டித்தார். அங்கேயே துடிதுடித்து மரித்தார்.

பிரியமான குட்டீஸ், ஏரோது ராஜாவை கவனித்தீர்களா? கர்த்தர் கொடுத்த வாய்ப்பு ஒவ்வொன்றையும் வீணடித்து கடைசிவரை திருந்தாமலே வாழ்ந்து தண்டிக்கப்பட்டார். இன்றைய நாட்களிலும் கர்த்தர், ஊழியர்களின் மூலமாக வசனத்தின்படி நமது தவறுகளை சுட்டிக் காண்பித்தால், உடனே திருந்த வேண்டும். இல்லா விட்டால் நாமும் தண்டிக்கப்படுவோம். செய்த தவறை உணர்ந்து திருந்தாதவர்களை பைபிள் பேதைகள் என்கிறன்றது. நாம் ஞானவான்களாக திருந்தி வாழ்வோம். கர்த்தர் நம்மை ஆசீர்வதித்து உயர்த்துவார்.

பயன்பாட வசனம் : நீதிமொழி 27:12 விவேகி ஆபத்தைக் கண்டு மறைந்து கொள்ளுகிறான்; பேதைகளோ நெடுகப்போய்த் தண்டிக்கப்படுகிறார்கள்.

ஆலோசனை சங்கத்தாரும் ஸ்தேவானும்

சிறுவர் பகுதி

அன்பான மழலை செல்லங்களுக்கு, நமது ஆண்டவர் இயேசுவின் நாமத்தில் அக்காவின் அன்பின் வாழ்த்துக்கள். முழு ஆண்டு தேர்வு (Annual Examination) நீங்கள் நன்றாக படித்து எழுத உங்களுக்காக நாங்கள் ஜெபிக்கின்றோம். அதனால் பயப்படாமல் தைரியமாக, நம்பிக்கையுடன் ஜெபித்து, நன்றாக படித்து எழுதுங்கள். கர்த்தர் நமக்கு துணையாக இருப்பார்.

இந்த மாதம் ஆலோசனை சங்கத்தார் ஸ்தேவான் என்பவருக்கு செய்தகைகளை வைத்து ஒரு அருமையான காரியத்தினை தெரிஞ்சுக்கலாமா? இந்த உண்மை சம்பவம் அப்போஸ்தலர் நடபடிகள் புத்தகத்தில் 6,7 அதிகாரங்களில் உள்ளது. நீங்களும் படிங்க. இப்போ அக்கா அதை சுருக்கமாக சொல்கின்றேன்.

ஏறக்குறைய 2000 ஆண்டுகளுக்கு முன்னாடி, கிறிஸ்துவின் சபையானது உருவாகி உலகமெங்கும் பரவ தொடங்கும் முன்பு, அது உருவான எருசலேம் பட்டணத்திலே மிக அதிகமாக வளர்ந்தது. நாளுக்கு நாள் 3000, 4000, 5000 என ஆயிரக்கணக்காணோர், ஆண்டவர் இயேசுவினை அறிந்து தங்கள் பாவ வாழ்வைவிட்டு திருந்தி திருமுழுக்கு பெற்று இரட்சிக்கப்பட்டுக்கொண்டே இருந்தனர்.

அப்பொழுதுதான் சபையில் ஒரு பிரச்சனை வந்து, கிரேக்க மொழி பேசுகின்றவர்கள் தங்கள் விதவைகள் நன்றாக கவனிக்கப்படவில்லை என்றனர். அப்பொழுது சபையில் இப்படிபட்ட காரியங்களையெல்லாம் கவனிக்க, 12 அப்போஸ்தலர்களனைவரும் சேர்ந்து, இரட்சிக்கப்பட்ட

விசுவாசிகளுக்குள்ளே பரிசுத்த ஆவியும் ஞானமும் நிறைந்து, நற்சாட்சி பெற்ற ஏழு பேரை உதவிக்காரர்களாக ஏற்படுத்தினர். அவர்களில் ஒருவர் தான் இந்த ஸ்தேவான். இந்த ஸ்தேவான் என்பவர் விசுவாசத்தினாலும் வல்லமையினாலும் நிறைந்தவராய் ஜனங்களுக்குள்ளே பெரிய அற்புதங்களையும் அடையாளங்களையும் செய்தார். சிலர் அவர்மேல் பொறாமைகொண்டு, அவரை ஆலோசனை சங்கத்திற்கு கொண்டு சென்றனர்.

அங்கே ஸ்தேவான் அனைவருக்கும் கர்த்தருடைய வார்த்தையை விவரித்து போதித்தார். அனைவரும் கேட்டனர்.

கர்த்தருடைய வார்த்தை அவர்களுடைய பாவங்களை சுட்டிக்காட்டினதால், அந்த மக்கள் திருந்த மனமின்றி, கோபமடைந்து, தங்கள் காதுகளை மூடிக்கொண்டு ஸ்தேவான் மீது கற்களை எறிந்தே கொன்றனர். மரிக்கும் போது ஸ்தேவான் அவர்களை மன்னிக்கும்படி கர்த்தரிடம் வேண்டிக்கொண்டார்.

செல்லங்களா, கவனித்தீர்களா? கர்த்தருடைய வார்த்தை நம்முடைய தவறுகளை சுட்டிக்காட்டும் போது, நாம் திருந்த வேண்டுமே தவிர, சொன்னவர்கள் மீது கோபப்படக்கூடாது. உங்கள் சபை போதகரோ, உங்கள் பெற்றோரோ, ஆசிரியர்களோ, பெரியவர்களோ உங்கள் தவறை சுட்டிக்காட்டினால், எதிர்த்துபேசாமல் அமைதியாக கேட்டு, உங்களை மாத்திக்கங்க. அப்பொழுது கர்த்தர் நம்மை ஆசீர்வதிப்பார்.

மனப்பாட வசனம் : உபா 30:8 "நீயோ மனந்திரும்பி, கர்த்தரின் சத்தத்திற்குச் செவிகொடுத்து, நான் இன்று உனக்குக் கற்பிக்கிற அவருடைய எல்லாக் கற்பனைகளின்படியும் செய்வாய்".

– பிரியா ஆண்டனி

அத்தனே பட்டணத்தார்

சிறுவர் பகுதி

ஹாய் குட்டீஸ்! உயிர்த்தெழுந்த ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் தங்களை வாழ்த்துகிறேன். இந்த முறை அப்போஸ்தலனாகிய பவுல் அத்தேனே பட்டணத்திற்கு சுவிசேஷ ஊழியத்தின் நிமித்தாக போகிறார். அங்கே என்ன நடந்ததென்று படிக்கபோகிறோம்.

அப்போஸ்தலனாகிய பவுல் ஒவ்வொரு பட்டணமாக சென்று சுவிசேஷத்தைப் பிரசங்கித்து ஊழியஞ் செய்து கொண்டு வந்தார். அப்படி ஒரு முறை அவர் 'அத்தேனே' என்ற பட்டணத்தின் வழியாக போக வேண்டியிருந்தது. அப்போது அவர் அந்த பட்டணத்தையும் அந்த மக்களையும் சுற்றிப் பார்த்தபோது அது (சிலைகள்) விக்கிரகங்களால் நிறைந்ததாய் இருந்தது. அவன் தினந்தோறும் அந்த பட்டணத்தாரோடு இயேசுவையும் உயிர்த்தெழுதலையும் அவர்களுக்குப் பிரசங்கித்து வந்தான்.

அவனுடைய பிரசங்கத்தை கேட்டவர்கள் வந்து அவனை மார்ஸ் என்ற மேடைக்கு அழைத்து கொண்டுபோய். நீ சொல்லுகிற காரியம் புதிதாக இருக்கிறதே அதை எங்களுக்கு தெளிவாக சொல்லு என்றார்கள்.

அதற்கு பவுல் அத்தேனே பட்டணத்தாரை நோக்கி : உங்கள் வழிபாடு முறைகளை கவனித்து பார்த்த போது அறியப்படாத தேவனுக்கென்று ஒரு பலிபீடத்தை பார்த்தான். அந்த தேவனைப் பற்றிதான் உங்களிடத்தில் பேசபோகிறேன் என்றான்.

வானத்தையும் பூமியையும் உண்டாக்கின கர்த்தர் கையினால் கட்டப்பட்ட கோவில்களில் வாசம் பண்ணுவதில்லை. பூமியிலுள்ள எல்லா மனுஷரையும் அவர் ஒரே இரத்தத்தினாலேதான் உண்டாக்கினார். எப்படியாவது அவரை அறிந்து கொண்டு தொழுகை செய்ய விரும்புகிறேன் அதினால் பொன் வெள்ளி கல் இவைகளினால் செய்யப்பட்டவைகளுக்கு நம்மை படைத்தவர் ஈடாக மாட்டார். அவர் பூமியிலுள்ள எல்லா மனுஷரும் மனந்திரும்பி தம்மைப் பிடித்துக் கொள்ள விரும்பி தம்முடைய குமாரனையே இந்த உலகத்திற்கு அனுப்பினார். உயிர்த்தெழுந்த அந்த இயேசுவைக் கொண்டு வந்து நம்மை நியாயந்தீர்க்க போகிறார் என்று பிரசங்கித்தான்.

அவன் பிரசங்கத்தை கேட்டவர்களில் இன்னோரு நாள் இதை கேட்கலாமென்றும், வேறு சிலர் அவனை தூஷித்து விட்டும் போனார்கள். ஒரு சிலர் மட்டுமே அவன் வாயினால் சொல்லப்பட்ட தேவ வார்த்தையை விசுவாசித்தார்கள்.

குட்டீஸ்! தேவ வார்த்தையாகிய வேத வசனம் நமக்கும் சொல்லப்படும்போது அதை அலட்சியம் செய்து அதற்கு கீழ்ப்படியாமல் போனால் நியாயத் தீர்ப்பின் நாளிலே நமக்கும் தண்டனை நிச்சயம். ஆகையினால் தேவனுடைய வசனம் நம்மிடத்தில் பேசும்போது அதற்கு அப்படியே நாம் கீழ்ப்படிந்தால் தேவ ஆசீர்வாதத்தைப் பெறலாம்.

மனப்பாட வசனம் : மத்தேயு 7:21 "பரலோகத்திலிருக்கிற என் பிதாவின் சித்தத்தின்படி செய்கிறவனே பரலோக ராஜ்யத்தில் பிரவேசிப்பானேயல்லாமல், என்னை நோக்கி கர்த்தாதேவ! கர்த்தாவே! என்று சொல்லுகிறவன் அதில் பிரவேசிப்பதில்லை".

– குயினி பிரதீப்

ஏப்ரல் மாத கேள்விகள்

1. "காதால் மந்தமாய் கேட்டு, கண்களை மூடிக் கொண்டார்கள்" என ஆண்டவர் யாரை பார்த்து சொன்னார்?
2. தேவன் எங்களோடே பேசாதிருப்பாராக, பேசினால் நாங்கள் செத்துப்போவோம் என்று சொன்னவர்கள் யார்?
3. ஆண்டவர் இயேசுவின் பாதத்தருகே அமர்ந்து வசனத்தினை கேட்டது யார்?
4. கர்த்தருடைய வார்த்தை கிடைத்தவுடனே எரேமியா என்ன செய்தார்?
5. தாவீது, கர்த்தருடைய வார்த்தையை இருதயத்தில் வைத்திருப்பது ஏன்?
6. கேட்ட வசனம் எபிரெயர்களுக்கு பிரயோஜன படவில்லை ஏன்?
7. நெடுகப்பாய் தண்டிக்கப்படுகிறவர்கள் யார்?
8. கண்ணீர் விட்டு கவலையோட தேடியும் மனம் மாறுதலை காணமற் போனவன் யார்?
9. என்னை தள்ளி என் வார்த்தைகளை ஏற்றுக் கொள்ளாதவனை வசனம் என்ன செய்யும் என ஆண்டவர் இயேசு சொன்னார்?
10. என்னில் அன்பாயிராதவன் என்ன செய்ய மாட்டான் என ஆண்டவர் இயேசு சொன்னார்?

பதில்கள் வந்து சேர வேண்டிய கடைசி நாள் : 5-05-2023

அனுப்ப வேண்டிய முகவரி : **சகோதரி. பேபி ராஜா**
45C/1, சர்ச் லேன், காரனேசன் தெரு,
அரசரடி, மதுரை - 625 016
செல் : 92 4421 4421, 92 4431 4431

சென்ற இதழ் பதில்கள்

1. லூக்கா 1:26,27
2. எபிரேயர் 10:35
3. அப்போ 12:12
4. யோவான் 20:18
5. லூக்கா 10:39,42
6. யோவான் 19:35
7. அப்போ 18:26
8. அப்போ 5:8
9. யோசுவா 2:9,11
10. லூக்கா 1:45

சென்ற இதழ் கேள்விகளுக்கு பதில் எழுதியவர்கள்

1. A. டேவிட் ஜெயச்சந்திரன் – மதுரை
2. Mrs. D.I. அன்பு சுதந்திரம் – நெல்லை
3. C. வைலட் கிறிஸ்டோபர் – தளவாய்புரம்
4. Mrs. மேரி ராஜ் – மதுரை
5. S.M. தேவி ராஜாசிங் – திருப்பூர்
6. Mrs. P. உமாராணி – ஈரோடு
7. Mrs. காந்தா மனோகரன் – திருச்சி
8. J. சுந்தரபாய் வில்லியம் – சேலம்
9. Mrs. சாந்தி ஜோயல் – திருச்சி
10. Mrs. R.P. டேவிட் – சேலம்
11. Mrs. A. அன்னத்தாய் ஆல்பர்ட் – தூத்துக்குடி
12. Mrs. சாந்தி வில்லியம் – புதுக்கோட்டை
13. A. லலிதா – புதுக்கோட்டை
14. G. ஏஞ்சலம்மாள் – மதுரை
15. J. விஜய் – மதுரை
16. Mrs. P. சமாதானம் பீட்டர் – விருதுநகர்
17. Mrs. ஹெலன் திலக் – தூத்துக்குடி
18. Mrs. தெல்மா ஸ்டான்லி – மதுரை
19. Mrs. பங்கஜம் ஜேம்ஸ் – மதுரை
20. S. அசோக்குமார் பிரின்ஸ் – தூத்துக்குடி
21. Mrs. J. ஜெயா ஜெபசெல்வம் – மதுரை
22. Dr. இவாஞ்சலின் ஜோன்ஸ் – சேலம்
23. S. நித்திகாஸ்ரீ – காங்கேயம்
24. Mrs. சாந்தி ஜோயல் – திருச்சி
25. S. ஆல்வின்ஜோஸ் – காங்கேயம்
26. A. ஆனந்த கதிரோன் – சென்னை
27. G. பீற்றர் பால்ராஜ் – ஆறுமுகநேரி
28. D.J. ஏஞ்சலினா – நாகர்கோவில்
29. K. ராஜா – அந்தியூர்
30. P. ஷைனி – காங்கேயம்
31. S. ஜஸ்வர்யா – காங்கேயம்
32. Mrs. P. இந்திரா – திருமங்கலம்
33. Mrs. S. சூரியபிரியா – மதுரை
34. S.M. தேவி ராஜாசிங் – திருப்பூர்
35. Mrs. P. உமாராணி – ஈரோடு
36. Mrs. காந்தா மனோகரன் – திருச்சி
37. S. பாக்கியராஜம் – மதுரை

தொடர்ந்து இப்பகுதியில் பங்குபெறும் அனைவருக்கும் வாழ்த்துக்கள் !

தொடர்ந்து இப்பகுதியில் பங்குபெறும் அனைவருக்கும் வாழ்த்துக்கள் !

CHURCH OF CHRIST & KIRUBAIYULLA VAARTHAI

PRESENTS

23வது கோடைகால வேதாகம முகாம் – 2023

நாள்

2023 மே 15 திங்கள் - காலை 9 மணிமுதல்
16 செவ்வாய் - மதியம் வரை

Save The Date
May 15
2023 16

இடம்

தரங்கம்பாடி முதல் தமிழ் பைபிள் அச்சிடப்பட்ட இடம்

பதிவுக்கட்டணம்

பெரியவர்கள் – ரூ. 800/- சிறியவர்கள் (10 வயதுக்குள்) – ரூ. 500/-

பிலேமோன், யூதா, வெளிப்படுத்தல் (1–3 அதிகாரம்)
ஆகிய நூல்களிலிருந்து செய்திகள் மற்றும் போட்டிகள் உண்டு.

முன்பதிவிற்கு

உங்கள் வருகையை உறுதி செய்ய விரைவில் பதிவு செய்யவும்.... நன்றி

சகோ. கிங்ஸ்லி ராஜா 92 4421 4421
சகோ. ஆண்டனி ராஜா 92 4431 4431
சகோ. ஜோசப் பிரதீப் 99 9426 7004

கிருபையுள்ள வார்த்தை வெளியிட்டுள்ள சிறப்பு புத்தகங்கள்

அன்பார்ந்த வாசகர்களே! இந்த அனைத்து புத்தகங்களையும் உங்கள் ஆத்மீக வளர்ச்சிக்கு பயன்படுத்திக்கொள்ளும்படி வேண்டுகிறோம். ரூபாய் 100/-மட்டும் அனுப்பி இப்புத்தக தொகுப்பை பெற்றுக்கொள்ளுங்கள்!

Place of Publication : Arasaradi, Madurai
Printed & Published by P.C. PHILEMON RAJAH
Printed at Classic Printers & Binders Madurai-2 ✆ 94421 23819
Registered News Paper No. : TNTAM/2011/42166
Postal Registration No. : TN/MA/67/2021 - 2023
Date of Publication : 8th April 2023
Posted at Arasaradi HPO on 10th 11th April 2023

தபால் வழி பைபிள் பாடங்கள்

கைபிரதிகள்

உங்கள் சுவிசேஷ ஊழியத்திற்கு கைபிரதிகள் பல்வேறு தலைப்புகளில் பாதி விலையில் கிடைக்கும். விபரங்களுக்கு : 92 4421 4421, 92 4431 4431

BIBLE STUDY BOOKS IN ENGLISH

AVAILABLE FOR SPECIAL PRICE!

If undelivered please return to :

EDITOR
KIRUBAIYULLA VAARTHAI
45 C/1, Church Lane,
Coronation Street, Arasaradi,
Madurai - 625 016. India
E-mail : biblecourseindia@gmail.com
Cell : 92 4421 4421, 92 4431 4431

To